Registered as a Newspaper

**Kleen Khut**

தெளிவான ரேனியோ பிரதிகளை விரைவாகப் பெறுவதற்கு நாடுங்கள்

**கிளீன் கட்**

239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22823

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

**Kleen Khu**

தரமான போட்டோ ஸ்ரற் பிரதிகள் பெறுவதற்கு நாடுங்கள்

**கிளீன் கட்**

239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22823

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 4 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 17 (20-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 312

★ மூன்று மாகாண சபைகள் யோசனை

# முஸ்லிம்களைக் கிழக்கில் பலிக்கடாக்கள் ஆக்கும்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கடும் சீற்றம்

— உதயன் அம்பாறை மாவட்டச் செய்தியாளர் —

அம்பாறை, நவ 20

இலங்கை அரசாங்கம் பெங்களூர் பேச்சுக்களின் போது சமர்ப்பித்த, கிழக்கு மாகாணத்தில் மூன்று மாகாணசபைகளை நிறுவும் திட்டத்திற்கு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

அரசின் இந்தத் திட்டம் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களைப் பலிக்கடாக்கள் ஆக்கும் சூழ்ச்சி என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் ஜனாப் அஷ்ரப் சொன்னதாவது;

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாகாண சபைகளை அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தன பெங்களூர்ப் பேச்சுக்களில் முன்வைத்தார்.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் மாகாண சபையாகவும்—

அம்பாறை மாவட்டம் முஸ்லிம் மாகாணசபையாகவும் —

திருகோணமலை மாவட்டம் சிங்கள மாகாண சபையாகவும் மாற்றி அமைக்கப்படும்.

உண்மையில் இவை மாகாண சபைகளாக இயங்க முடியா; மாவட்ட சபைகளாகவே இயங்க முடியும்.

1981 ஆம் ஆண்டின் சனத் தொகைக் கணக்கெடுப்பின்படிதான் இம் மாகாண சபைகளை அமைக்கப் போவதாக அரசின் பிந்திய யோசனைகள் கூறுகின்றன.

1981 கணக்கெடுப்பின் படி அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்தனர்

1986 கணக்கெடுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20—11—1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
7. 39 முதல் 9. 09 வரை

ராகுகாலம்:
1.39 முதல் 3.09 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்




அவைக்கு ஆர் பலிக்கடாவானால் என்ன, தங்கடை ஆக்கள் ஆளும் இனமாய் இருந்தால் சரி தான்...!

# சாகும்வரை போராட்டம் நேற்று ஆரம்பமானது

## 2 மாணவிகள் உட்பட அறுவர் பங்கு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமல் போனது தொடர்பாக நடைபெற்று வந்த போராட்டங்களின் உச்சக்கட்டமாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று ஆரம்பமானது

வெளியார் ஒருவர் இரு மாணவிகள் உட்பட ஆறுபேர் இப்போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பல்கலைக்கழக வாசலில் போடப்பட்டிருந்த ஒரு கொட்டிலில் இவர்கள் தமது உண்ணாவிரதப்போரை ஆரம்பித்தனர்.

பெரும் எண்ணிக்கையான சக மாணவர்கள், நண்பர்கள் கலங்கிய கண்களுடன் சூழ நின்றனர்.

சில மாணவிகள் சோகம் தாங்காது அழுதனர்.

பல மாணவ, மாணவிகள் அவர்களோடு சேர்ந்து ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

கிராமிய தொழிலாளர் சங்க பிரதிநிதிகளும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போரின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு கோருகிறார் விஜிதரனின் தந்தை

யாழ்ப்பாணம், நவ. 20

சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதை நிறுத்துங்கள்.

விஜிதரனின் தந்தை திரு. அருணகிரிநாதன் மேற்கண்டவாறு உருக்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

அவர் பேசும்போது மாணவர்கள் கலங்கிய கண்களுடன் கவனித்துக் கொண்டிருந்தனர். சில மாணவிகள் அழுதனர்.

விஜியின் தந்தை கலங்கிய கண்களுடன் தழுதழுத்த குரலில் மேலும் பேசுகையில், ஒரு மகனை இழந்து பெருந் துன்பத்தையும், கவலையையும் நானும் என் மனைவியும் அனுபவிக்கிறோம்.

இதே துயரத்தை உண்ணாவிரதிகளின் பெற்றோரும் அனுபவிக்கக் கூடாது என்பதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்தையில் 11 தமிழர் கைது

அம்பாறை, நவ. 20

மல்வத்தைக் கிராமத்தில் கடந்த செவ்வாய் இரவு ஆயுதப்படையினர் 11 தமிழரைக் கைது செய்தனர்.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளது மல்வத்தைக் கிராமம்.

கைது செய்யப்பட்ட 11 பேரில் ஐவர் சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபடுபவர்கள்.

இவர்களை விடுவிக்கும்படி உதவி அரச அதிபர் திரு கே. விக்னராஜா, அம்பாறை அரசாங்க அதிபர் மூலம் அம்பாறை இராணுவ இணைப்பதிகாரியைக் கோரியிருக்கிறார். (இ-எ-14)

ஈஸ்ட்ஹாம் சம்பவம்

## 5 தமிழர்மீது குற்றச்சாட்டு

லண்டன், நவ. 19

லண்டன் ஈஸ்ட்ஹாம் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஐந்து தமிழர் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது.

லண்டன் நீதிமன்றம் ஒன்றில் ஐவரும் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

ஈஸ்ட்ஹாமில் நெருப்புக் குண்டு வீசப்பட்டதில் வீடு ஒன்று எரிந்து 3 இலங்கைத் தமிழர்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

# தமிழரை நாடு கடத்துவதற்கு வெளிநாடுகளுடன் உடன்படிக்கை

## ஏற்பாடு செய்ய சட்டமா அதிபருக்கு பணிப்பு

கொழும்பு, நவ. 20

பிரிட்டன், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, புரூணி ஆகிய நாடுகளுடன் நாடு கடத்தும் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட இலங்கை நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இது சம்பந்தமான நகல் சட்டமூலம் ஒன்றைத் தயாரிக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சட்டமா அதிபரைப் பணித்திருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தி சட்டமூலத்தைத் தயாரிக்கும் படியும் சட்டமா அதிபர் கோரப்பட்டுள்ளார்.

இந்த நாடுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை விதிக்சப்பட்ட தமிழ்த் தீவிரவாதிகளை இலங்கைக்குக் கொண்டுவரும் நோக்குடன்தான், இலங்கை அரசு இந்த நாடுகடத்தும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதில் அக்கறை காட்டி வருகின்றது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதனிடையில் இலங்கையுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் நாடுகள் மூலம் இந்தியாவையும் இதில் சம்பந்தப்படுத்துவதில் இலங்கை ராஜதந்திர வட்டாரங்கள் ஈடுபடுகின்றன.

நாடு கடத்தும் உடன்பாடு ஒன்றை இலங்கையுடன் செய்து கொள்வதை இந்தியா ஆதரிக்கவில்லை (இ-எ)

# 15 வருட சிறை!

## முஸ்லிம் ஆசிரியருக்கு

### பயங்கரவாத வழக்கில்

கொழும்பு, நவ. 20

அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்ட முஸ்லிம் ஆசிரியர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யு. சேனநாயக்க பதினைந்து வருட சிறைத் தண்டனை விதித்தார்.

வத்தேகமவைச் சேர்ந்த இந்த ஆசிரியரின் பெயர் அப்துல் பாவா அப்துல் காதர்.

மலைநாட்டில் போராளி அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சித்தது—

சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தை கவிழ்க்கும்படி மக்களைத் தூண்டியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டன.

இக் குற்றங்களை எதிரி ஏற்றுக்கொண்டார்.

இக் குற்றங்களை கண்டி. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் 1-8-1983 க்கும் 6-6-85 க்கும் இடைப்பட்ட காலத்தில் புரிந்ததாக குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் இவர் மீது சுமத்தப்பட்டிருந்த வேறு மூன்று குற்றச்சாட்டுக்கள் வாபஸ் வாங்கப்பட்டன. (இ-எ)

## கடற்படையினரால்

# மீன்பிடிப் படகு இயந்திரங்கள் பறிமுதல்

## ஆனால் பத்திரம் விநியோகம்

பலாலி, நவ. 20

காங்கேசன்துறையில் இருந்து பலாலி வரையுள்ள கரையோரப்பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சுமார் 25 மீன்பிடிப்படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்கள் கடற்படையினரால் பறிக்கப்பட்டன.

கடற்கரையில் இருந்து இரண்டு மைல்களுக்குள் மீன் பிடித்தவர்களிடமே இயந்திரத்தைக் கைப்பற்றியதற்கான பத்திரமும் கடற்படையினரால் வழங்கப்பட்டது.

அதற்கப்பால் மீன் பிடித்தவர்களின் இயந்திரம் எவ்வித பத்திரமும் இன்றிப் பறிக்கப்பட்டது

பறிக்கப்பட்ட வெளி இணைப்பு இயந்திரங்கள் காங்கேசன்துறைஹாபர் வியூ ஹோட்டலில் வைக்கப்பட்டுள்ளன என்று அறியவருகின்றது

முன்பு பலமுறை இவ்விதம் வெளி இணைப்பு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எனினும் அதற்கான பத்திரம் எதுவும் வழங்கப்படவில்லை; இயந்திரங்கள் திருப்பி வழங்கப்படவும் இல்லை.

இம்முறையே முதல் தடவையாக பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-119)

## ஆஸ்பத்திரி வளவில் கிடந்த மோதிரம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ் போதனா ஆஸ்பத்திரி வளவில் நேற்றுக்காலை ஒரு மோதிரம் கண்டு எடுக்கப்பட்டது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி ஆஸ்பத்திரி இயக்குநரிடம் இருந்து மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்து உள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னரும் ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டது.

உரியவர்கள் கோராத காரணத்தினால் அந்த மோதிரமும் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடமே இன்னும் உள்ளது.

(இ-எ)

## ★ பஸ் எரிப்புக்கு 5 வருடம்

கொழும்பு, நவ 20

யாழ்ப்பாணத்தில் வைத்து இ. போ. ச. பஸ் ஒன்றை எரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட திருமலை இளைஞர் ரி. தர்மலிங்கம் தயாளன் என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. லயனல் விக்ரமசூரிய 5 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

நீதிமன்றத்தில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். (இ-எ)

# எதிரிகளை கண்டுபிடித்து தரக் கோரியே உண்ணாவிரதம்

## புலிகளுக்கு மாணவர் பதில்

யாழ்ப்பாணம், நவ. 20

''விஜிதரனைக் கடத்திச் சென்ற 'எதிரிகளை' கண்டுபிடித்து தரக் கோரியே நாம் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறோம்''

—இப்படி பல்கலைக்கழக மாணவர்கள் தரப்பில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் அந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது போராட்டத்தின் ''எதிரிகள்'' விஜிதரனைக் கபடத்தனமாகக் கடத்திச் சென்றவர்களே.

அந்த ''எதிரிகளை''க் கண்டுபிடித்துத் தருமாறுதான் தமது கட்டுப்பாட்டில் குடாநாட்டை வைத்திருக்கும் விடுதலை இயக்கங்களைக் கோருகின்றோம்.

விஜிதரன் விவகாரத்தைப் பொறுத்தவரை நாம் எந்தவகையிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை 'விக்கி' விடுதலை

கொழும்பு, நவ. 20

திருகோணமலை முன்னாள் எம்பி திரு. இரா. சம்பந்தனின் தம்பியும் திருகோணமலை நகர சபை முன்னாள் தலைவருமான இரா விக்னேஸ்வரன் நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டார்.

திரு. இரா. விக்னேஸ்வரன் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கே நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்தே திரு விக்னேஸ்வரன் விடுதலை செய்யப்பட்டார்.

1983 இல் மூதூரில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்களைப் பொலீஸாருக்குக் கொடுக்கத் தவறியதாக திரு. விக்னேஸ்வரன்மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

திரு. விக்னேஸ்வரனின் சார்பில் சட்டத்தரணி ஏர்ட்லி பெரேரா, சட்டத்தரணி சிவா இராஜரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

(உ-எ-1)

# கண்டனங்களுக்கு பதில் அறிக்கை விட ஜெயலலிதாவுக்குத் தடை!

சென்னை, நவ. 19

கண்டனங்களுக்கு பதில் அறிக்கை விடுக்க அ. தி மு. க. கொள்கை பரப்புச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான திரு எம் ஜி. இராமச்சந்திரன் இத்தடையை விதித்திருக்கிறார்.

தமிழக அமைச்சரவையில் இருந்து 10 அமைச்சர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அ.தி.மு.க. வில் உட்பூசல் தோன்றி உள்ளது தெரிந்ததே.

பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு காளிமுத்து, ''அமைச்சர்கள் இப்படி பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு செல்வி ஜெயலலிதாதான் காரணம்'' என்றுபகிரங்கமாகவே கண்டனம் தெரிவித்திருக்கின்றார்.

இதுபோன்று வேறு சில அ.தி.மு.க. பிரமுகர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆர். எம். வீரப்பன், செல்வி ஜெயலலிதாவைப் பெயர் சொல்லித் தாக்காவிட்டாலும் ''முதலமைச்சருக்கும் முன்னால் இருப்பவர்களும் அருகில் இருப்பவர்களுமே உட்பூசலுக்குக் காரணம். அவர்கள் யாராக இருந்தாலும் எதிர்ப்பேன்'' — என்று கூறியிருக்கின்றார்.

இக்கண்டனங்களுக்கு எல்லாம் தகுந்த முறையில் பதிலளிக்க அனுமதி தரும்படி செல்வி ஜெய

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைகள் வெளிநாட்டு உதவி கோர முடியாது

## அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, நவ. 20

வெளிநாடுகளிடம் இருந்து எக்காரணங் கொண்டும் உதவிகோர மாகாணசபைகள் அனுமதிக்கப் படமாட்டா.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்

வத்தேகம என்னும் இடத்தில் நடந்த கருத்தரங்கில் பங்குபற்றிப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

நாட்டுக்குள் வர விரும்பும் எவரும் பாஸ்போர்ட் வைத்து இருக்க வேண்டும். பாஸ்போர்ட் இன்றி நாட்டுக்குள் நுழைய எவரும் அனுமதிக்கப் படமாட்டார்கள். பாஸ்போர்ட்டுக்களை எரித்தவர்கள் அதன் பலனை அனுபவிக்கத்தான் வேண்டும்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

(இ - எ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### அகதிகள்

அச்சுவேலி, நவ 20

தொண்டமானாறு பகுதியில் இருந்து இராணுவத்தினரின் தாக்குதலுக்கு பயந்து தமது இல்லங்களை விட்டு வெளியேறிய பல குடும்பங்கள் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையிலும் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திலும் அகதிகளாக தங்கியுள்ளனர்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் பத்து குடும்பங்களும் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் இருபது குடும்பங்களும் தங்கியுள்ளன.

பாடசாலையில் வகுப்புக்கள் மாற்றி அமைக்கப்பட்டு அகதிகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(உ-11)

### உடைக்கப்படும் சுவர்கள்

மட்டக்களப்பு, நவ.20

அக்கரைப்பற்று அம்பாறை வீதியிலுள்ள சகல மதிற்சுவர்களும் ஆயுதபடையினரால் உடைக்கப்பட்டு வருகின்றன.

ரோந்து செல்லும் ஆயுதபடையினரை போராளிகள் மதில் மறைவுகளிலிருந்து தாக்குகிறார்களாம்.

இத்தாக்குதல்களை முறியடிக்கவே இந்நடவடிக்கை என ஆயுதபடை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

### செம்படையின் செயல்

யாழ்ப்பாணம், நவ 20

யாசாலையில் வெடித்த சிகரட் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு செம்படை இயக்கமே பொறுப்பு என ஆயுதப்படை வட்டாரங்களின் விசாரணை மூலம் தெரிய வந்திருக்கிறது.

யசாலை வாசியான ஐ. கேமச்சந்திரா (30 வயது) என்பவர் வீதியில் கிடந்த 4 சிகரட்களை உள்ளடக்கிய சிகரட் பெட்டியை கண்டெடுத்தார்.

அன்றிரவு இரண்டு சிகரெட்டுகளை படுக்கையில் புகைத்தார். மறுநாள் காலை மற்றென்றை புகைத்த போது வெடித்து காயமுற்றார்.

இதனையடுத்து படையினர் சிகரெட் பெட்டியை கைப்பற்றினர். அப்பெட்டியில் மேற்படி அமைப்பின் பெயர் காணப்பட்டது (உ-21)

### நீதிபதியாக பதவி உயர்வு

கரவெட்டி, நவ.20

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திரு கே. கணபதிப்பிள்ளை அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து பல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று மாறவுள்ளார்.

இதேவேளை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு வீ. விக்னேஸ்வரன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கும், ஆம்பா நீதிமன்ற நீதிபதி திரு விஸ்வநாதன் பதவி உயர்வுடன் பருத்தித்துறை நீதிவானாகவும் பதவி ஏற்கவுள்ளனர்.

இவர்களது மாற்றமும் அடுத்த ஆண்டு ஆரம்பத்திலேயே அமுலுக்கு வரும். (உ 70)

### பார்சல் ஏற்கப்பட மாட்டாது

மட்டக்களப்பு, நவ, 20

கடும்புமுகாம்களிலும் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிரவாகசந்தேக நபர்களின் பெயருக்கு எலாசமிடப்பட்ட பார்சல்கள் ஏற்க வேண்டாமென சகல தபால் அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மா அதிபதியினால் இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(உ-21)

### மீனவர் கொலை

மட்டக்களப்பு, நவ 20

மட்டக்களப்பு துறைநீலாவணை கிராமத்தில் சுற்றி வளைப்பு தேடுதலில் ஈடுபட்ட ஆயுதப்படையினரால் நான்கு மீனவர்கள் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர்.

இத்தேடுதலில் 6 ஆசிரியர்கள் 20 மாணவர்கள் உட்பட சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்

(இ-21)

# களிமண் பற்றாக்குறையால் காங்கேசன்சிமெந்து ஆலை அவதி

## உற்பத்தி பாதிப்படையும் அபாயம்

யாழ்ப்பாணம், நவ.20

காங்கேசன்துறை சிமேந்து தொழிற்சாலைக்கு தேவையான மூலப் பொருளான களிமண் பெறுவதில் கூட்டுத்தாபனம் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

முன்னர் முருங்கனிலிருந்து இக்களிமண் பெறப்பட்டது.

ரயில்சேவை சீர்குலைந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து கொண்டுவருவது நிறுத்தப்பட்டது.

கடந்த சில மாதங்களாக; அளவெட்டி, உடுவில் பகுதிகளிலுள்ள குளங்களில் இருந்து களிமண்ணை கூட்டுத்தாபனம் பெற்று வந்தது.

இவை தொழிற்சாலையின் உற்பத்திக்கு போதுமானது அல்ல.

மேலும் குளங்களை ஆழமாக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் சம்மதத்தையும் பெறவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் தொழிற்சாலையின் உற்பத்திக்கு போதியளவு களிமண் பெறுவது கூட்டுத்தாபனத்திற்கு பெரும் பிரச்சினையாகவுள்ளது. (இ-5)

# அச்சுவேலியில் விறகுத் தட்டுப்பாடு

அச்சுவேலி, நவ 20

அச்சுவேலிப் பகுதியில் விறகுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் செயற்படும் மரக் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான அளவு விறகுகளை மேலிடம் அனுப்பி வைக்காமையே தட்டுப்பாட்டிற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

அண்மையில் அச்சுவேலி மரக்காலைக்கு ஆறு லொறிகள் விறகு அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் அது மூன்று தினங்களில்விற்பனையாகி விட்டது.

''பொதுமக்கள்கட்டுப்பாட்டு விலைக்கு விறகு பெறக்கூடியதாக தேவையான அளவு விறகு லொறிகளை அச்சுவேலி மரக்காலைக்கு அனுப்பி உதவுமாறு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் திரு கே. நாகராசாவைக் கேட்டுள்ளது (உ-11)

# விஜிதரனை மீட்க இயங்கங்கள் முன்வர வேண்டும் என்கிறார் தந்தை

யாழ்ப்பாணம், நவ 20

காணாமற் போன பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை மீட்டுத் தர எல்லா இயக்கங்களும் முன் வர வேண்டும்.

விஜிதரனின் தந்தை திரு. ரி. அருணகிரிநாதன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்

வேண்டுகோள் வருமாறு;

இம்மாதம் 4 ஆம்திகதி விஜிதரன் காணாமற்போனார் இன்று இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன. தகவல் எதுவும் தெரியவில்லை.

நான்கு புதல்விகளையும் மட்டக்களப்பில் தனியே விட்டு விட்டு தாயார் இங்கு கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்.

எங்களுக்கு எல்லா இயக்கங்களிலும் பூரண நம்பிக்கை இருக்கிறது. இன்று யாழ் குடாநாடு அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது அவர்கள் அனைவரும் மனம் வைத்து முயற்சித்து விஜிதரனை மீட்டுத் தரும்படி மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கிறோம்—

இப்படி திரு. அருணகிரிநாதன் தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார் (இ-எ)

### மக்கள் முகம்

### இளையதம்பி வித்தியாலய அபிவிருத்திச்சபை

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ் இளையதம்பி வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபைக் கூட்டம் அதிபர் கா கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய செயலவை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் கா.கணேசதாசன் அதிபர், செயலாளர் க. சிவகுரு ஆசிரியர் பொருளாளர் திருமதி லீ செல்வரத்தினம், உபசெயலாளர் த. செல்வராஜா, உபதலைவர் என். வாமதேவா

மேலும் எட்டு செயலவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர், (இ)

### புலிகளின் வானொலி

யாழ்ப்பாணம், நவ.20

தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலியை தினமும் பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 4 30 வரை சிற்றலை 41 மீற்றர் 7050. 7030, 7010 கிலோ ஹேற்ஸ் அலைவரிசைகளில் கேட்கலாம்.

இரவு 9.15 முதல் 9.45 வரையும் இதே அலைவரிசைகளில் இது மீண்டும் ஒலிபரப்பாகும். (இ-10)

### குருநகர் நவீன சந்தைக்கு ரூ- 1லட்சம்

யாழ்ப்பாணம், நவ. 20

குருநகர் நவீன சந்தைக் கட்டட மேல் மாடிக் கட்டடத்துக்கென யாழ் மாநகரசபை 1லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடந்த5 ஆண்டுகளாக மாடிக்கட்டடத்தின் கீழ் பகுதிகள் மட்டுமே வேலைகள் முடிந்துவாடகைக்கு விடப்பட்டு வந்தன.

(இ-5)

# திருமலை திரும்பும் அகதிகளுக்குக் காணி

## அரச அதிபர்நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.20

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து மீள திருமலையில் குடியேறும் அகதிகளுக்கு நெற் செய்கை செய்வதற்கான உதவிகளை அரசு வழங்குகிறது.

இதற்கென தம்பலகாமம், குமரன் கடவை, செருவல பகுதிகளில் 7,500ஏக்கர் செய்கைக் காணியை திருமலை அரசு அதிபர் ஒதுக்கியுள்ளார்.

அகதிகளுக்கு விதை நெல், பசளை உட்பட 2500ரூபா பணமாக கொடுத்துதவ புனர்வாழ்வு அமைச்சும் முன் வந்துள்ளது. (இ 5)

### ஆஸ்பத்திரியிலிருந்து ஆள் கடத்தல்

மட்டக்களப்பு, நவ 20

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த முஸ்லிம் இளைஞர் வாகனத்தில் வந்த ஆயுதபாணி நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் ஆஸ்பத்திரியில் வைத்து கடத்தப்பட்டவர் முகமட் லியாட்கான் (25வயது) எனக் கூறப்படுகிறது.

இக்கடத்தலுக்கு காரணம் யார் என்பது இதுவரை தெரியவில்லை.

(உ-21)

ஈழ மக்களின் நிலையை விளக்கும்

## தமயந்தியின் புகைப்படக் கண்காட்சி



இன்றும் நாளையும்

20-11-86, 21-11-86

தினமும் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 7-00 மணி வரை

இடம்: யாழ். பிச் இன்

வை. எம். சி. ஏ., யாழ்ப்பாணம்.

## நத்தார் கட்டுரைப் போட்டி

எச் சமயத்தவரும் பங்குபற்றலாம்

விடயம்:

1. நத்தார் கூறும் செய்தி
2. இன்று நத்தார் அவசியமா?
3. பூமியில் சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக

கனிஷ்ட பிரிவு: 7 — 9ஆம் ஆண்டு மாணவர்கள்

இடைநிலைப் பிரிவு: 10 13ஆம் ஆண்டு மாணவர்கள்

சிரேஷ்ட பிரிவு 22 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்லாத மாணவர்கள்.

எப்பிரிவினரும் எவ்விடயத்திலும் எழுதலாம். கட்டுரைகளைத் தபால் மூலம் அல்லது நேரில் Y M.C A, யாழ்ப்பாணத்தில் 10-12-86இற்கு முன் சேர்க்கவும்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### மருந்துகள் வந்தன

வேலணை, நவ. 20

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உப அலுவலக ஆயுர்வேத வைத்திய சாலைக்கு புதிதாக மருந்துகள் வந்துள்ளன இம்மருந்துகள் நாவின்ன அரச ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டவையெனத் தெரிவிக்கப்படுகிறது (உ-167)

### ஆயுதப்படையினரால் ப. நோ. கூ. சங்கத்திற்கு 4இலட்சம் ரூபா நஷ்டம்

மட்டக்களப்பு, நவ. 20

மட்டக்களப்பு படுவான்கரை பகுதியில் ஆயுதபடையினர் முகாமிட்டுள்ளதாலும் அவர்கள் நடவடிக்கைகளினுலும் கனவன்குடா - ஈச்சந்தீவு ப.நோ. கூ. சங்கத்திற்கு சுமார் 4 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நஷ்டத்திலிருந்து விடுபட்டு சங்கம் தொடர்ந்து இயங்க நிவாரணம் வழங்குமாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சிடம் சங்கம் கோரியுள்ளது

சங்கத்தின் தலைவர் திரு. சோ யோகானந்தராஜா இது தொடர்பாக அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

வவுணதீவில் படையினர் தொடர்ந்து முற்றுகையிட்டிருப்பதால் அப்பாதை வழியாக போக்குவரத்து நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சங்கமும் இயங்கவில்லை.

படை முகாம்பதிகாரியுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டதையடுத்து 11 பேர் இப்பகுதிக்குச் சென்று சங்கத்தைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

தொலைபேசி, தட்டச்சு, உணவு முத்திரை, தளபாடங்கள் உட்பட பல பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன இதன் பெறுமதி சுமார் 4 இலட்சம் ஆகும்.

சங்கத்தின் லொறி மட்டும்தான் எம்மால் மீட்க முடிந்தது எனக் குறிப்பிட்டுள்ளார், (உ-211)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்:

# சிங்கராயர் மீதான வழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 20

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பந்தமாக வண. பிதா ஆபரணம் சிங்கராயர் மீதானவழக்குவிசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு.ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆரம்பமானது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட இனந்தெரியாத சிலரைப் பிடிக்கத் தடையாக இருந்தது.

இத் தாக்குதலில் சம்பந்தபட்டவர்கள்பற்றி தகவல் கொடுக்கத் தவறியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் வண. பிதா சிங்கராயர் மீது சுமத்தப்பட்டுள்ளன

விசாரணையில், தாக்குதலில் உயிர் தப்பிய சார்ஜண்ட் டொன் அனுரா வீரக்கூன் சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

1982 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் திகதி நடந்த சம்பவம் எனக்கு நினைவில் உள்ளது.

அன்று காலை ரோந்து முடிந்து செல்லம் என்ற சந்தேக நபருடன் சாவகச்சேரி பொலீஸ் நிலையம் வந்தேன்.

விடுதியில் நித்திரையில் இருந்த சமயம் துப்பாக்கிச் சத்தம் கேட்டது மேல் மாடியில் நான் அச்சமயம் இருந்தேன். பொலிஸ் நிலையத்தைத் தாக்குகின்றார்கள் என்பதை நான் உணர்ந்தேன்.

சுட்டுக்கொண்டே தாக்கியவர்கள் மேலே வந்தனர். சப் இன்ஸ்பெக்டர் விக்ரமசிங்க தங்கியிருந்த அறையை உடைத்துக் கொண்டு அவர்கள் உள்ளே சென்றனர்

தாக்குதல் நடத்தியவர்கள் இராணுவ சீருடையில் வந்தனர் - இப்படி சார்ஜன்ட் வீரக்கூன் சொன்னார்.

வண. பிதா ஆபரணம் சிங்கராயரின் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி பாலாதம்பு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

(உ-எ)

### வல்வையில் சிறுவர் பூங்கா

வல்வெட்டித்துறை, நவ. 20

வல்வெட்டித்துறையில் சிறுவர்களுக்கான பூங்கா ஒன்று வல்வை மக்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனை பழைய சந்தைக் கட்டடப்பகுதியில் அமைப்பதற்கு சகல ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன.

இதன் ஆரம்ப கட்டமாக வல்வை மக்கள் ஒருங்கிணைந்து சிரமதான வைபவம் மூலம் பூங்கா [illegible] துப்பரவு செய்தனர்.

(இ-16)

இக்கட்டான இந்நிலையில் தமிழினம்

# யாரை நம்புவது என்பதைக் காட்டும் நூல்

## வெளியீட்டுவிழாவில் வித்தி

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழினம் இன்றிருக்கும் அவல நிலையிலே யாரை நம்ப வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது இந்நூல். யாழ்ப்பாணக் கவிஞர்க்களை மாத்திரமல்ல நாட்டில் பல பாகங்களிலும் பரந்து வாழும் கவிஞர்களது, கவிதைகளையும் இணைத்து வெளியிட்டிருப்பது சாலச் சிறந்தது வண்ணைக் கவிஞரின் முயற்சி காலத்தால் அழியாததாகும்.

- இவ்வாறு கடந்த வெள்ளியன்று நல்லை ஆதின கலா மண்டபத்தில் நடைபெற்ற – வண்ணைக் கவிஞர் தொகுத்து வெளியிட்ட – 'நல்லூரான் திருவடியைநம்பு' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் கலந்து வாழ்த்துரை வழங்கிய [illegible] பல்கலைக்கழக துணைவேந்தர், [illegible] வித்தியானந்தன். கூறினார்.

குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

நூலின் முதல் பிரதியை தொழிலதிபர் திரு. நா. இரத்தினம் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் அ சண்முகதாஸ், கனகசபாபதி நாகேஸ்வரன், நடிகமணி வி.வி. வைரமுத்து, இளம்புலவர் ஸ்ரீ தயா சின்னத்தம்பி, எழுத்தாளர் க. குணராஜா, ஆ. மு. அருணாசலம், முருகவே, பரமநாதன், எஸ். கனகரத்தினம், பொன். மதிமுகராசா, உட்பட பலர் உரையாற்றினர். (உ)

### முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் சயூரன் கனகலிங்கம்

அளவெட்டி வடக்கு காளிகோயிலடியைச் சேர்ந்த செ. கனகலிங்கம் லீலாவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சயூரன் இன்று (20–11–86) தனது முதலாவது பிறந்த நாளை வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார் இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, மாமன்மார், மாமிமார் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், அக்காமார், அண்ணமார், மச்சான்மார், மச்சாள்மாரும் இறைவன் அருளால் சகல கலைகளும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

## கச்சேரி - யாழ்ப்பாணம்

காங்கேசன்துறை உணவுக்களஞ்சியம் 2இல் வெடிப்பு ஏற்பட்ட சுவருக்கு முட்டுச் சுவர்களும் ஆதார கொங்கிறீற் தீராந்திகளும் கட்டுவதற்கான

# கேள்விப்பத்திரம்

காங்கேசன்துறை உணவுக்களஞ்சியம் 2ன் சுவரிலேற் பட்ட வெடிப்புகளுக்குச் செய்யப் படவேண்டிய திருத்த வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட சிறு அளவு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப் படுகின்றன 1986ஆம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி நண்பகல் 12மணி வரை கீழ்க் குறிக்கப் படுபவரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும்.

அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மேலதிக அரசாங்க அதிபர் மாவட்ட நிருவாகம், கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவோ அல்லது கச்சேரி நிருவாக உத்தியோகத்தர் வசம் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியினுள் இடப்படவோ வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்ட அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் இடது பக்க மூலையில் ''காங்கேசன்துறை உணவுக் களஞ்சியம் 2ன் திருத்த வேலைக்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்படல் வேண்டும்,

கேள்விப்பத்திரப் படிவங்களை யாழ்ப்பாணம் கச்சேரி உணவுக் கிளையில் 1986 நவம்பர் 26ந் திகதி பி.ப.02 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 1986 டிசம்பர் 5ம் தேதி காலை 10 மணியளவில் மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர் விரும்பின் சமுகமளிக்கலாம்.

மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட நிர்வாகம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

நாமவளி சொல்லி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்
-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி


**உதயன்**

இல. 13, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24?0 22073
20-11-1986 த. பெ. இல. 23


# ஆசிரியர் சம்பளம்

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்களின் சம்பள விடயம் பெரும் பிரச்சினைக்கு உரியதாகிவிட்டது.

அவர்கள் இடமாற்றம் பெற்று வந்து பல மாதங்கள் ஆகிவிட்டன- ஆனால் உரிய சம்பளத்தைப் பெறமுடியவில்லை. அதாவது வெளி மாவட்டங்களில் பணியாற்றிய வேளை கிடைத்த சம்பளம் இங்கு வழங்கப்படவில்லை.

பட்டதாரி ஆசிரியர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் யாழ்ப்பாணம் வந்த பின்னர் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களுக்குரிய வேதனமே பெறுகிறார்கள்.

யாழ்ப்பாணம் இடமாற்றம் பெற்று வந்தவர்களின் சுயவிவரக் கோவை இங்கு வந்து சேராததால் இந்தச் சிக்கலும் கஷ்டமும் உருவாகி உள்ளன.

இது பெரும் கவலைக்குரிய விடயம். கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும். இப்போதைய பொருளாதார நிலையில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளமே போதுமானதல்ல. பல ஆசிரியர்கள் வீட்டில் 'ரியூசன்' கொடுப்பதற்கு குறைந்த சம்பளமும் ஒரு காரணமாகக் கூறப்படுவது உண்டு.

அப்படியிருக்க, கிடைத்த சம்பளம் குறைந்து போனால் ஆசிரியர்கள் எப்படித் தமது குடும்பங்களைக் கொண்டு நடத்துவது? அவர்கள் மனம் வைத்து மாணவருக்குப் பயிற்றுவிப்பர் என எப்படி எதிர்பார்ப்பது?

இந்தச் சம்பள விவகாரம் ஆசிரியர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினை என்பது மட்டுமல்ல. மாணவர்களின் கல்வியை மேலும் பாதிக்கும். அதுமட்டுமன்றி பெற்றோர் 'ரியூஷனுக்கு' அதிக பணம் செலவிட நிர்ப்பந்திக்கும்.

மொத்தத்தில் ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதால், மூத்தரப்பில் பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை எவரும் மறுக்க இயலாது.

இடமாற்றலாகி வந்த ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள், அவர்கள் பணியாற்றிய மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து சேராதது யாழ். கல்வித் திணைக்களத்தின் பிழையல்லத்தான்.

அரசாங்கக் காரியாலயங்களில் தமிழர் சம்பந்தப்பட்ட எந்த அலுவல்களும் வெளி மாவட்டங்களில் தாமதமாக நடப்பது இப்போது சர்வசாதாரணம். தமிழர் மீது பழி வாங்கும் நோக்குடன் தான் இந்தத் தாமதங்கள் உருவாக்கப்படுகின்றனவோ என்று கூட சந்தேகப்பட வேண்டி உள்ளது.

அதுமட்டுமன்றி அரச ஊழியர்களாக உள்ள தமிழர்களின் நலன்களில் அரசுக்கு அக்கறை இல்லை என்றும் ஊகிக்க வேண்டி உள்ளது.

எனினும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வந்து பல மாதங்களாகக் குறைந்த சம்பளம் பெறும் ஆசிரியர்களின் நிலை குறித்து யாழ். கல்வித் திணைக்களம் இதுவரை அக்கறை காட்டவில்லையா என்ற கேள்வியையும் எழுப்பவேண்டி உள்ளது.

ஆசிரியர்களின் சுய விவரக்கோவை வெளி மாவட்டங்களில் இருந்து வரவில்லையெனில் அந்த மாவட்டங்களுடன் யாழ். கல்வித் திணைக்களம் தொடர்பு கொண்டு அந்த விவரங்களை அனுப்புமாறு இதுவரை கேட்காதது ஏன்?

இப்போது தான் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியப்படுகிறது. இதே முயற்சியை ஆசிரியர்கள் இடமாற்றலாகி வந்த இரண்டொரு மாதங்களில் மேற்கொண்டிருக்க முடியாதா?

மாணவர் நலன் பேணுவதற்கு ஆசிரியர்கள் நலன் பேணப்படுவதும் அவசியம். இது கல்வித் திணைக்களத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் போனது ஏனோ?

கல்வித் திணைக்களத்துக்கு பலதரப்பட்ட வேலைச் சுமைகள் இருக்கலாம். ஆனால் முன்னுரிமை கொடுத்து கவனிக்கப்படவேண்டியவற்றுக்கு முதலிடம் வழங்குவது மிக அவசியம். ஆசிரியர்கள் சம்பளம் நிச்சயமாக முன்னுரிமை பெற வேண்டிய விடயம். அதனை எவரும் மறுத்துரைக்க இயலாது; அல்லவா?

சாவகச்சேரி நூலகம்:

## இரவல் வாங்கிய நூல்களை பலர் திருப்பி ஒப்படைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், நவ. 20

சாவகச்சேரி பொது நூலக இரவல் பெறும் பகுதியில் இருந்து நூல்களைப் பெற்றுக்கொண்ட பல வாசகர்கள் அந் நூல்களை திரும்பி நூலகத்தில் ஒப்படைக்கவில்லை.

இவர்கள் மீது நூலகப் பொறுப்பதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

பெறுமதிவாய்ந்த இலகுவில் கிடைக்க முடியாத நூல்களை மீள ஒப்படைக்கப்படவில்லை என நூலகப் பொறுப்பதிகாரி என். நவரத்தினம் தெரிவித்தார். (இ-5)

### இடம் மாற்றம்

மட்டக்களப்பு, நவ.20

பூஸா தடுப்பு முகாமிலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 41 தீவிரவாத சந்தேக நபர்கள் வெல்லத்தை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

41 பேர் தொடர்பான பெயர் விபரங்கள் மட்டக்களப்பு அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (உ-31)

# போதை வஸ்து கடத்தலில் அரசியல்வாதி

போர்ட் லூயிஸ், நவ. 19

மொரீசியஸ் கூட்டு அரசாங்கத்தில் முக்கிய கட்சியாக விளங்கும் சோஷலிச இயக்கத்திற்கும் போதை வஸ்து கடத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது புலனாகியுள்ளது.

போதை வஸ்து கடத்தலுடன் சோஷலிச கட்சிக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்ததும் முன்னாள் பிரதி பிரதம மந்திரியான சரிஸ் கூவை கட்சியிலிருந்து வலக்கப்பட்டதாக மொரீஷியஸ் அரசு அறிவித்தது.

இந்து சமுத்திரத்தில் போதை வஸ்து கடத்தல் பற்றிய விசாரணைக் குழு முன் விசாரிக்கப்பட்ட கடத்தல்காரர்கள் அரசியல் பிரமுகர்களுடன் தொடர்பு இருந்ததால் தமக்கு சாதகமாக இருந்ததாகத் தெரிவித்தனர்.

இதனால் சுங்கப் பரிசோதனைகளிலிருந்து இலகுவாகவும் தப்பித்துக் கொள்ளக் கூடியதாக இருந்ததாம். (ஒ)

### கூட்டு நடவடிக்கை

பாரிஸ், நவ. 19

சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு பிரான்சும் ஜேர்மனியும் கூட்டாக நடவடிக்கை எடுக்கவுள்ளன.

இருநாடுகளினதும் உள்நாட்டு அமைச்சர்கள் சந்தித்தபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க குழுக்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும் இருநாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. (ஒ)

### மலேசியா எதிர்ப்பு

இஸ்ரவேல் ஜனாதிபதி ஹேர்ஷொக் சிங்கப்பூருக்கு விஜயம் செய்ய விருப்பதால் மலேஷியா அரசு அதனை எதிர்க்கும் வகையில் தனது தூதரை சிங்கப்பூரிலிருந்து திருப்பி அழைத்துள்ளது.

**வெளி உலகில்**

# பயங்கரவாதிகளை ஆதரிப்பவர்கள் தேச விரோதிகளாம்

புதுடில்லி, நவ 19

பஞ்சாப்பில் பயங்கரவாதிகளை ஆதரிக்கும் அனைவரும் தேச விரோதிகள் எனக் கருதப்படுவர்.

இவ்வாறு உள்துறை அமைச்சர் பூட்டா சிங் எச்சரித்துள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு புகலிடம் கொடுப்பவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பஞ்சாப்பிலும் வேறு சில பகுதிகளிலும் அண்மையில் பல வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு எதிராக மக்களை திரட்ட எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும். பயங்கரவாதிகளைத் தனியாகப் பிரிக்கவேண்டும்.

இவ்வாறு பூட்டா சிங் மேலும் தெரிவித்தார். (ஒ)

ஈராக்கிற்குக் கிடைத்த

# அமெரிக்க உதவி ஈரானுக்கு எதிராக

பக்தாத், நவ.19

இராணுவ சாதனங்களையும் கம்ப்யூட்டர்களையும் ஈராக்கிற்கு அமெரிக்கா வழங்கும்.

இதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு அமெரிக்க அரசு அங்கிகாரம் அளித்துள்ளது.

ஈரானுடனான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக இந்த இராணுவ சாதனங்கள் பயன்படுத்தப்படும்.

ஈரானின் எண்ணெய் நிலையங்கள் மற்றும் துருப்புக்களின் நடமாட்டம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு கம்ப்யூட்டர் கருவிகள் உதவும். (ஒ)

### காஷ்மீரில் பனிப்புயல்

ஸ்ரீநகர், நவ. 19

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நேற்று முன்தினம் கடும் பனிப்புயல் வீசியது.

இதனால் சுமார் 20 பேர் உயிரிழந்தனர். 160க்கும் மேற்பட்டோர் பனிப்புயல் பகுதியில் சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெறுகின்றது. விமானப் படைக்குச் சொந்தமான ஏழு ஹெலிக்கொப்டர்கள் இந்த சேவையில் ஈடுபடுகின்றன.

இறந்தவர்களது சடலங்கள் இதுவரையில் மீட்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### உரிமை கோரியது

பாரிஸ், நவ. 19

றினோல்ட் மோட்டார் காரின் ஸ்தாபன தலைவரின் கொலைக்கு பிரான்சு இடதுசாரி கிளர்ச்சி இயக்கம் உரிமைகோரியுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க இரு பெண்கள் அவரை கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொன்றனர். (ஒ)

### தேசிய ஒற்றுமை தினம்

புதுடில்லி, நவ. 19

இந்திராகாந்தியின் 69வது பிறந்த நாள் நினைவு தினம் இந்தியா முழுவதிலும் தேசிய ஒற்றுமை தினமாக நேற்று புதன்கிழமை அனுடிக்கப்பட்டது. (ஒ)

### வழக்கு தாக்கல்

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸனின் அக்கியூனோவின் கணவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் 23 ராணுவ சிப்பாய்கள் மீதும் ஜப்பானியர் ஒருவர் மீதும் வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன (ஒ)

### கடற்படை வீரர் பதவி நீக்கம்

ஆஜென்டீனாவிற்கு எதிரான போக்லாந்து யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்த மகாராணியின் வீரப் பதக்கம் பெற்ற கடற்படை கப்டன் பிரிட்டனின் பாதுகாப்பு ரகஸியங்களை விற்றதாக குற்றம் சாட்டப்பட்டு தற்போது கடற்படையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஒ)

கிளிநொச்சி

# கிராமசேவையாளர் பிரச்சினை தீருமா?

கிளிநொச்சி, நவ.20

அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சிக் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள சகல அரச கூட்டுத்தாபனங்களும் இன்று சீர்குலைந்து அலுவல்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இந்நிலையில் இப்பிரிவு கிராம சேவையாளருக்கு இப்பிரிவில் நிரந்தர அலுவலகம் இல்லாதது மக்களுக்கு பெரிதும் இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளது.

சுமார் 75ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களையும் 5000க்கு மேற்பட்ட அகதிகளையும் உள்ளடக்கிய இக்கிராம சேவையாளர் பிரிவை ஐந்து பிரிவுகளாக பிரிக்க பல தடவைகள் பலதரப்பினரும் முயற்சித்தனர்.

எனினும் இந்த விடயத்தில் மேலிடங்கள் காட்டியுள்ள அசமந்தப் போக்கு இப்பிரிவு மக்களுக்கு பெரும் தடைக்கல்லாகவுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தின் முன்னர் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட கிளிநொச்சியில் நன்கு பழக்கப்பட்ட ஒருவரான திரு.எஸ் தனபாலசிங்கம் கிளிநொச்சி கிராம சேவையாளராகக்கடமையாற்றி வந்தார்.

இவர் ஓர் பல்கலைக் கழகப் பட்டதாரி.

மிகவும் உற்சாகமாகவும் திறமையாகவும் இவர் கடமை புரிந்தது இப்பகுதி மக்கள் குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்யமுடிந்தது.

பின்னர் இவருக்கு உதவியாக மேலும் ஒரு கிராமசேவகர் நியமிக்கப்பட்டார்.

கிளிநொச்சிக் கிராம சேவகர் எஸ் தனபாலசிங்கம் இராணுவ முகாமிற்கு செல்லாததால் பதவியிலிருந்து தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். உதவியாளரான கிராம சேவகர் எஸ். வேலாயுதபிள்ளை இராணுவ ஷெல்லுக்கு பலியானார்.

இந் நிலையில் இப்பிரிவுக்கு நான்கு மாத இடைவெளியின் பின்னர் வன்னேரிக்குளத்தில் கிராம சேவையாளராக கடமையாற்றிய திரு வே. சிவரத்தினம் இடமாற்றப்பட்டார்.

இவர் கிராமத்திற்கு புதியவர். தற்போதைய சூழ்நிலையில் இப்பிரிவில் கிராமசேவையாளர் அலுவலகம் ஒன்றை ஓரிடத்தில் அமைக்கவும் முடியாது. அமைத்தால் கிளிநொச்சி மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய இடத்து மக்கள் அவ்விடத்திற்கு சென்று கொள்ளவும் முடியாத இக்கட்டான சூழ்நிலை.

முன்பு சாதாரண நிலையில் ஓர் அலுவலகத்தை கிராம சேவையாளர் அமைத்தால் அங்கு சகலரும் சென்று முடிந்தது. அத்தோடு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் இப்பிரிவிலேயே அமைந்திருந்தது.

ஆனால் இன்று இப்பிரிவில் இருந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் சுமார் 15 மைல்களுக்கு அப்பாலுள்ள கண்டாவளைக்குச் சென்றுள்ளது.

அத்தோடு கிராமசேவகர்களும் தங்கள் கடமைக்கு மேலாக மரண விசாரணைகள், அகதிகள் பிரச்சினை, அகதி நிவாரணம் போன்ற பல விடயங்களையும் கவனிக்க வேண்டியுள்ளது.

இந் நிலையில் கிளிநொச்சிக் கிராமசேவகா பிரிவிலுள்ள சுமார் 80 ஆயிரம் மக்கள் தமது சாதாரண அலுவல்களைக் கூட கிராம சேவையாளரைச் சந்தித்து நிறைவேற்ற முடியாது பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

ஆகவே இக்கிராம சேவையாளர் பிரிவினை ஆகக் குறைந்தது நான்கு பிரிவுகளாகப் பிரிக்க அரசாங்க அதிபரும் மேலிடமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது இந் நடவடிக்கைக்கு முன்னதாக தற்காலிகமாகவாவது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு பிரிவுகளிலும் தலா ஒவ்வோர் தற்காலிக அலுவலகம் அமைத்து கிழமையில் தலா ஒருநாள் என்ற அடிப்படையில் ஒருநாள் கிராம சேவகரும் ஒரு நாள் விசேஷ சேவை உத்தியோகத்தரும் கடமையாற்ற வேண்டும்.

இதற்கு இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும். (இ-76)

ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப்

# பரீட்சை மதிப்பீடுகள் இம்முறை மீண்டும் கொழும்பில்

பலாலி, நவ. 20

இவ்வாண்டு ஜீ. சி. ஈ. (சாதாரணதர)ப் பரீட்சையின் மதிப்பீடுகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்த மதிப்பீட்டு வேலைகள் 1984 ஆம் ஆண்டில் மாத்திரம் யாழ் பகுதியின் அசாதாரண சூழ்நிலையில் கொழும்பில் தற்காலிகமாக நடைபெற்றன.

தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மதிப்பீட்டு வேலைகள் இம்முறை மீண்டும் கொழும்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

டிசம்பர் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கவிருக்கும் மதிப்பீட்டு வேலைகள் ஜனவரி 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடைத்தாள்களுக்குப் புள்ளியிட கொழும்பிற்கு செல்லும் பரீட்சகர்களுக்கு மதிப்பீடு செய்வதற்கான கட்டணத்திற்கு மேலதிகமாக பயணம் செய்வதற்காக கடமை புகையிரத ஆணைச்சீட்டும், குறிப்பிட்ட முழுக்காலத்திற்குப் பிழைப்பூதியப் பணமும் (வாழ்க்கைச் செலவுப்படி) வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு கொழும்பிற்குச் செல்லும் பரீட்சகர்களில் தேவையானோருக்கு அக்காலகட்டத்தில் கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

மதிப்பீட்டு வேலைகளில் தாம் பங்குபற்றுவதற்கான தமது இசைவை நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கும்படி சகல பரீட்சகர்களையும் பரீட்சை ஆணையாளர் திரு. டபிள்யூ எஸ். பெரேரா கேட்டுள்ளார். (உ-11-119)



**பொய்யாமொழி**

குறள்:

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

பொருள்:

ஒருவன் கறுவு கொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்குத் திரும்பத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

**வாசகர் திருமுகம்**

பருத்தித்துறை மின்சார சீர்கேடு:

## நகராட்சி மன்ற செயலாளர் விளக்கம்

பருத்திதுறை மின்சார விநியோகம் பற்றி 23-10-86 ஆம் திகதி திரு. மா. தங்கராசாவின் பெயரில் பிரசுரமான "வாசகர் திருமுகம்" சம்பந்தமாகப் பின்வரும் விபரங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பருத்தித்துறை நகராட்சிமன்ற நிர்வாகத்தை நான் மூன்று மாதங்களுக்கு முன்னரே பொறுப்பேற்றேன். அன்று முதல் சட்டவிரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்த பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பலனாக சட்டவிரோத மின் பாவனையாளரான மின் வடங்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு, குற்றப்பணமும் அறவிடப்பட்டு வருகின்றது.

சட்டபூர்வமற்ற முறையில் மின்சாரத்தை முழுமையாகக் களவாடுபவர்கள் மட்டுமல்லாது, சட்டபூர்வமாக மின் இணைப்பைப் பெற்றுக்கொண்டு கணிசமான அளவு மின்சாரத்தை நுட்பமான முறையில் களவாகப் பாவித்தவர்கள் கூட இத்தகைய தண்டனைக்கு உள்ளாகப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக நடைபெறும் ஷெல் தாக்குதலினால் கல்லூரி வீதியில் உள்ள உப-மின்நிலையம் பாதிக்கப்படுவதால் இதனை உடனுக்குடன் சீர்செய்வதற்கு இராணுவ அதிகாரியின் அங்கீகாரத்தைக் கோரியிருந்தேன்.

இத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுத் திருத்த வேலைகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததால், இதற்கு நிரந்தரத் தீர்வுகாணும் நோக்கோடு, இலங்கை மின்சார சபையின் பிரதேச பொறியியலாளருடன் ஏற்கவே தொடர்பு கொண்டு, உரிய மின்மாற்றியை கல்லூரி வீதி உப மின்நிலையத்திலிருந்து அகற்றி வட இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஒரு கட்டடத்தை அமைத்து உரிய முறைப்படி பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றேன்.

அதே வேளையில் ஓர் இடைக்கால நடவடிக்கையாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலையில் உள்ள உப மின்நிலையத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு மின் விநியோகம் செய்து ஓரளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நகரின் மின் விநியோகத் திட்டம் மிகப் பழையது. அப்பகாலத்தில் நிறுவப்பட்ட மரத்தூண்களும் இணைக்கப் பட்ட மின் வடங்களும் காலத்துக்குக் காலம் மறுசீரமைக்கப் படாமையாலும் மின் தடைகள் ஏற்படுவதுண்டு. இவையும் ஒழுங்குபடுத்தும் நோக்கோடு முதற்படியாக பாதிப்புற்ற மரத்தூண்களை அகற்றி கொங்கிறீற் தூண்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

பாதுகாப்பு வலயத்தினுள் இராணுவ முகாமுக்கு அணித்தான பகுதிகளில் மின் குமிழ்கள் களவுபோவதால் இவற்றை மாற்ற முடியவில்லை. இது குறித்து அப்பகுதி கிராம சவகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனினும் பொதுசன நடமாட்டமுள்ள பகுதிகளில் மின் குமிழ்கள் பொருத்தப் பட்டும், பழுதடைந்தவை மாற்றப்பட்டும் வருகின்றன.

நிலைமை இவ்வாறு இருக்க, சட்டவிரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், மின் குமிழ்கள் மாற்றப்படவில்லை என்பதும், மின்சாரக் கோளாறுகளுக்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கற்பனை செய்துகொண்டு ஆலோசனை வழங்குவதும் வேண்டுமென்றே இந்நிர்வாகத்திற்கு அபகீர்த்தி உண்டுபண்ணும் செயலாகவுள்ளது.

க. சண்முகநாதன்
செயலாளர் நகராட்சிமன்றம்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக மீட்டல், வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன
**DAY CLASSES**
8-00 மணி
SAT. + SUN. 12.00 மணி



# உதயன்

20 · 11 · 1986 வியாழக்கிழமை



**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
I. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர் ஒன்றிணைந்து நடத்தும் ஒரே நிறுவனம்.
II. பரீட்சைப் பெறுபேறுகள் குறைந்து இருந்தால் கவலைப் படாதீர்கள். எமது நிறுவனம் கைகொடுக்கும். கடந்த காலப் பரீட்சை முடிவுகள் இதற்குச் சான்று ஆகும்.


### மற்றொரு இயக்கத்தினர்

# நெடுந்தீவுப் பகுதியில்

## புலிகள் மீது தாக்குதல் முயற்சியாம்

## அறிக்கையில் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 20

நெடுந்தீவுப் பகுதியில் வைத்து ஈ. பி. ஆர். எல் எவ். போராளிகள் தங்கள்இயக்கப்போராளிகளுக்குத் தீங்கு விளைவிக்க முயன்றதாக விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குற்றம் சுமத்தி உள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களின் சுருக்கம் வருமாறு:-

நெடுந்தீவுப் பகுதியில் புலிகள் எனக் கூறிக் கொண்டு சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இருவரை நாம் கைது செய்து விசாரித்தோம்.

அவர்களில் ஒருவர் தம் பலகாமத்திற்கும் மற்றையவர் கும்புறுப்பிட்டிக்கும் மக்கள் விடுதலைப் படை பொறுப்பாளராக இருந்ததாக ஒப்புக் கொண்டனர்.

தற்போது கருத்து வேறுபாடு காரணமாக ஈ. பி ஆர். எல். எவ் விலிருந்து தாங்கள் விலகி இந்தியா செல்ல இருப்பதாகவும் அவர்கள் கூறினர்

அவர்களிடம் ஒரு மோட்டார் சைக்கிளும்; சுழல் துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டன.

இந்தச் சம்பவத்தை அறிந்து அங்குள்ள ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நெடுந்தீவில் உள்ள எமது இயக்க உறுப்பினர்களிடம் சென்று அவர்கள் இருவரையும் தம்மிடம் ஒப்படைக்கும்படியும்-

ஒப்படைக்காதவிடத்து தாம் எமது உறுப்பினர்கள் மீது சண்ட இடத்தில் தரைக்கண்ணி வெடி தாக்குதல் நடத்துவதாயும் கூறிச் சென்றுள்ளனர்.

இது குறித்து புங்குடுதீவைச் சேர்ந்த எமது அங்கத்தவர்கள் சிலர் விசாரிக்கச்சென்றசமயம் நெடுந்தீவு இறங்குதுறையில் வைத்து அவர்கள் மீது ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க உறுப்பினர்கள் கிறனேட் தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும், எமது உறுப்பினர்கள் எவரும் காயமடையவில்லை.

மேலும் தரைக்கண்ணி வெடியொன்றினை அவர்கள் வெடிக்கச் செய்துள்ளனர். தரைக்கண்ணிவெடி தற்செயலாக வெடிக்காததினால் எமது உறுப்பினர்கள் உயிர்தப்பினார்கள்.

இச்சம்பவத்தையடுத்து அவர்களை எமது உறுப்பினர்கள் துரத்திக் கொண்டு சென்ற சமயம் ஓடி ஒளித்து விட்டனர்.

நாம் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மனிதாபிமான முறையில் யாழ் நகரில் உள்ள அவர்களின் மேலிடத்துக்குச் சென்று இது குறித்து தெரிவித்துள்ளோம். இந்த விடயம் குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

### உண்ணாவிரதத்தை ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

லேயே சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு நான் மாணவர்களை அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் எனது மகனைத் தேடி இங்கே வருமுன்பே மாணவர்கள் அவரைத் தேடி போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர். எனது மகனை மறந்தாலும் அவர்களை நான் மறக்கமுடியாது.

இப்படி அவர் கூறினார் (இ-5)

# தமிழீழத்தின் குரல் கேட்டதால் இத்தண்டனை!

மட்டக்களப்பு, நவ 20

தமிழீழத்தின் குரல் ஒலிபரப்பு செவிமடுத்துக் கொண்டிருந்த குடும்ப பெண்மணி ரோந்து வந்த படையினரால் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இச் சம்பவம் மட்டக்களப்பு ஆரையம்பதி கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

மேற்படி பெண்மணி வானொலியை கேட்டவண்ணம் சமையலில் ஈடுபட்டிருந்தார். அந் நேரம் கால் நடையாக ரோந்து வந்த படையினர் இதனை செவிமடுத்து வீட்டிற்குள் புகுந்தனர். விசாரித்து விட்டு பெண்மணியை தாக்கினார்கள்.

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட பெண்மணி எச்சரிக்கையின்பின் விடுவிக்கப்பட்டார். (உ-21)

### மதகுருமார் ஒன்றுசேர்ந்து

# அரசைக் கவிழ்ப்பது பெரிய வேலையல்ல

## கலமுல்லே தேரர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 20

1956 இல் செய்தது போன்று எல்லா பௌத்த மதகுருமாரும் சேர்ந்து இத் துரதிஷ்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பது பெரிய வேலை அல்ல.

— இப்படி வண கலமுல்லே சுகததேரோ களுத்துறையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் சொன்னார்.

பௌத்தர்களின் புனிததலமான அனுராதபுரம் ஸ்ரீமகாபோதியில் ரத்தம் சிந்தப் பட்டது மகாபோதியை — மக்களை — பாதுகாக்க முடியாத இந்த அரசாங்கம் பதவியில் இருப்பதில் என்ன பயன்?

முழுச் சிங்கள மக்களுமே இன்று பாதுகாப்பு இன்றித் தவிக்கிறார்கள்.

-- இப்படி அவர் சொன்னார். (உ-ஐ-எ)

# ஜனநாயகத்தை பேணவே போராட்டம்

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், நவ 20

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே பல்கலைக்கழக மாணவர்கள் போராடுகிறார்கள் என நாம் கருதுகிறோம்.

— விஜிதரன் கடத்தல் தொடர்பாக ஈ.பி.ஆர். எல்.எவ் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

இது வெறுமனே ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல.

இது மக்களின் உயிர் வாழும் உரிமை, பாதுகாப்புக்கான உத்தரவாதம், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளோடு அவை கேடு கெட்ட முறையில் மீறப்படும் நடவடிக்கைகளோடு பின்னிப் பிணைந்துள்ள விடயமாகும்.

அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் அராஜகத்தின் ஆணிவேரை அறுத்தெறியவும் தம்மைச் சாகடிக்கவும் துணிந்துவிட்ட மாணவர்களோடு சீண்டி விளையாடுவது ஆபத்தானதாகும்.

நிறுவனமயப்பட்டிருக்கும் மாணவ சக்தி நெருப்புக்குச் சமன்

விஜிதரன் கடத்தப்பட்டமையை கௌரவப் பிரச்சினையாகக் கருதாது உடன் விடுதலை செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். (உ)

# இங்கிலாந்து வெற்றி

பிறிஸ்பேர்ன், நவ. 20

பிறிஸ்பேர்னில் இங்கிலாந்து அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் ஐந்தாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றது.

ஓட்ட விவரம்:

இங்கிலாந்து: முதல் இன்னிங்ஸ் 456.

இயான் பொதம் 138. அதி 76, கட்டிங் 61, கவர் 51 - கியூஸ், வோல், மத்யூஸ் தலா 3 விக்கெட்டுக்கள்.

இரண்டாவது இன்னிங்ஸ் - 3 விக்கெட் நஷ்டத்துக்கு 75.

ஆஸ்திரேலியா: 248, 282 ஓட்டங்கள். (உ)

### கண்டனங்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலிதாமுதலமைச்சரைக் கேட்டிருந்தார்.

பதில் அறிக்கை எதுவும் விடுக்கக்கூடாது என்று இப்போது முதலமைச்சர், செல்வி ஜெயலலிதாவுக்குத் தடை விதித்திருக்கிறார். (இ எ)

# தமிழ் ஆசிரியர் இடமாற்றம்

## தாமதமடையலாம்

மட்டக்களப்பு, நவ 20

அடுத்த வருடத்துக்கான ஆசிரியர்கள் இடமாற்றத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தாமதம் அடையலாம் என கல்விச் சேவை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சிங்கள ஆசிரிய இடமாற்ற விண்ணப்பங்கள் குழுவினால் தற்போது துரிதமாக ஆராயப்பட்டு வருகின்றன.

700 தமிழ் ஆசிரியர்களது விண்ணப்பங்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சு அறிக்கை இதுவரை கல்விச் சேவைக் குழுவுக்கு கிடைக்கவில்லையாம். இதனை அடுத்தே இடமாற்றம் தாமதம் ஏற்படலாமென தெரியவருகிறது. (இ-21)

### எதிரிகளை கண்டு---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

குழம்பியிருக்கவில்லை.

எமது நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக பல தடவைகளில், பல வழிகளில் மக்கள் முன் வைத்துள்ளோம்.

விஜிதரன் கடத்தல் நடவடிக்கை திட்டவட்டமாக ஓர் அராஜகச் செயல். இந்த அராஜகத்தில் இருந்து எம்மைப் பாதுகாக்க - விஜிதரனை விடுவிக்க - நாம் போராடுகின்றோம்.

எமது போராட்டம் எந்த ஓர் இயக்கத்திற்கோ, எமது விடுதலைப் போராட்டத்திற்கோ எதிரானதல்ல.

எமது அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டமே இது.

இது விடயத்தில் யாரும் தமக்குள் குழம்பிக் கொண்டால் அதற்கு நாம் பொறுப்பாளியாக முடியாது.

சம்பவங்களின் தொடர்ச்சியைக் கொண்டு மக்களுக்குள்ளிருந்து ஏதேனும் ஊகங்கள் ஏற்படுவதற்கும், நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டிய கருமர், ஆலால் கொலைகளைப் போன்ற பல கோரத்தனமான, கோழைத்தனமான சம்பவங்கள் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிகழ்ந்து தான் இருக்கின்றன.

அந்தக் கதி விஜிதரனுக்கும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே நாம் போராடுகின்றோம்.

இயக்கம் உடைந்து அல்லது உடைக்கப்பட்டு அல்லது அழிந்து, அழிக்கப்படும்போது தான் உண்மை வெளிவரும் என்பதை - உண்மையை வெளிக்கொணர்வதற்கான ஓர் அணுகுமுறையாக கைக்கொள்ள இயலாது

மூடி மறைக்கப்படும் உண்மைகளை போராடித்தான் வெளிச்சத்துக்குக் கொண்டுவர முடியும்.

விஜிதரன் விவகாரத்தில் பல்கலைக்கழக மாணவர்களாகிய எமக்கு எந்தத் தீய நோக்கமுமில்லை என்பதை மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

''தீயசக்திகள்'' எனக் கையாளும் பதங்களை குறிப்பாக அச் சக்திகளை இனங்காட்டி முன்வைப்பதே சிறந்ததாகும். (உ)

### முஸ்லிம்களைக் கிழக்கில்---

பின்படி அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்தான் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

**வட்ட மேசை மாநாட்டின் பின்னர்...**

1984 வட்டமேசை மாநாட்டின் பின்னர் மட்டும் அம்பாறை மாவட்டத்தில் சுமார் 45,000 சிங்களவர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அம்பாறை மாவட்டம், முஸ்லிம்களுக்கான மாகாண சபையாக எப்படி இயங்க முடியும்?

பெயரளவில் முஸ்லிம் மாகாணசபையாக இருக்குமே ஒழிய, முஸ்லிம்கள் ஆளப்படும் இனமாகவே அம்பாறைமாகாண சபையில் இருப்பர்.

உத்தேச மூன்று மாகாணசபைகளில் ஒன்றில் கூட முஸ்லிம்கள் ஆளுபவர்களாக இருக்க மாட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு என்று ஒதுக்கப்பட்டதில் கூட அவர்கள் பெரும்பான்மையாக இருக்கமாட்டார்கள்.

இதற்கு மாற்றுவழி நாம் முன்னர் கூறியது தான்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப்பகுதிகளை இணைத்து தமிழ் மாகாணசபை உருவாக்கலாம் அல்லது தமிழ்பகுதிகளை வடக்கு மாகாணத்துடன் இணைக்கலாம்

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளை இணைத்து முஸ்லிம்களுக்கான மாகாண சபை நிறுவப்படவேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவில பகுதியை வடமத்திய மாகாண சபையுடன் இணைக்கவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிந்தனை சிங்களப் பகுதியை ஊவா மாகாண சபையுடன் சேர்க்க வேண்டும் இதன் மூலம் மூன்று இன மக்களும் நூறு வீத சுதந்திர உணர்வுடன் வாழ முடியும்.

இப்படி ஜனப் அஷ்ரப் சொன்னார். (இ-எ-14)

### சாகும்வரை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் விவரங்கள் வருமாறு:

இ. குகதாசன் (வயது 23) விஞ்ஞானபீடம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

ஜே. எக்ஸ். செல்வநாயகம் (வயது 22) கலைப்பீடம் 14 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

த. விமலேஸ்வரன் (வயது 23) வர்த்தக பீடம்தம்பிராய், பூநகரி.

சங்கரப்பிள்ளை கோகிலேஸ்வரி (28 வயது) வர்த்தக பீடம், கல்லடி, மட்டக்களப்பு.

மு. விஜயகுமாரி (23 வயது) கலைப்பீடம், தொல்புரம், சுழிபுரம்.

எஸ். பிரசாத் (21 வயது) வெளியார், நல்லூர், யாழ்ப்பாணம்.

# புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 20

''இன்றும் நாளையும்'' யாழ் பீச் இன் ஹோட்டலில் தமயந்தியின் புகைப்படக் கண்காட்சி நடைபெறும்.

ஈழமக்களின் இன்றைய நிலையை விளக்கும் இப் புகைப்படக் கண்காட்சி காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை இடம்பெறும். (உ-5)


# உதயன் - சஞ்சீவி

## சந்தா விவரம்

**உள்நாடு**

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரு. ச | ரு. ச | ரு. ச. |
| ஒரு வருடம் | 313·00 | 104·00 | 417·00 |
| 06 மாதம் | 156·50 | 52.00 | 208·50 |
| 03 மாதம் | 78·50 | 26,00 | 104·50 |
| **அஞ்சல் செலவு உட்பட** | | | |
| காலம் | ரு. ச. | ரு. ச | ரு. ச. |
| ஒரு வருடம் | 469-50 | 156-00 | 625-50 |
| 06 மாதம் | 234-75 | 78-00 | 312·75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விபரங்கள் மாற்றத்துக்குரியன



## நீதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்

# ஷப்ரு

நம்பிக்கையுடன் சேமிக்க
உங்கள் தோழனின் உதவியை நாடுங்கள்!

Your Friends in Finance

★ ஷப்ரு ★

யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

**SHABRA**
**UNICO FINANCE LIMITED**



The Best in Jaffna.
for,
Food,
Service,
Comfort
At
**R·S·R·**
GREEN PEKING
PALACE
Open 9 a m.
to
11 p. m.
4th Cross Street,
JAFFNA
Phone: 23873



## உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத. திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை
நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது
உன்னத பணி

## யாழ். ஆஸ்பத்திரி
# இரத்த வங்கி

உங்கள் வரவை
எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்


### பணிவான வேண்டுகோள்

அராலி தெற்கு கற்குளி வீதியில் 10-9-86 மாலை 7.30 மணியளவில் இனம் தெரியாத இரு இளைஞர்களால் அவசர தேவைக்காக ஒரு நாளில்திருப்பித் தருவதாக எனது மோட்டார் சைக்கிளை துப்பாக்கி முனையில் வாங்கிச் சென்று 2மாதத்துக்கு மேலாகியும் என்னிடம் ஒப்படைக்காததையிட்டு மனக்கவலையுடனும் எனது அன்றாட அலுவல்களையும், தொழில் சம்பந்தமான வேலைகளைச் செய்வதிலும் பல சிரமத்துக்குள்ளாகி இருக்கிறேன். இந்த மோட்டார் சைக்கிள் நான் வேலை செய்யும் நிறுவனத்துக்குரியது இல்லை என்பதையும் எனக்குச் சொந்தமானது என்பதையும் இதை எனது நண்பரிடம் தவணைக் கடன் அடிப்படையில் கடன் கூட முழுமையாகக் கட்டப்படாத நிலையில் இருப்பதையும் அறியத்தருகின்றேன் எனவே தயவுசெய்து மோட்டார் சைக்கிளை எடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் என்னிடம் நேரடியாகக் கொண்டு வந்து தாருங்கள்.

உற்பத்தி:- CG 125 Honda. நிறம்:- சிவப்பு, இலக்கம்:- 85ஸ்ரீ 407 இயந்திர இல;- CG 125E 1210860 சிவில் நிர்வாகம் இல்லாத இவ் வேளையில் நல்லெண்ணம் படைத்த அமைப்புக்கள், பொதுஸ்தாபனங்கள், புனித இயக்கங்கள் எனது பணிவான வேண்டுகோளை ஏற்று மோட்டார் சைக்கிளை மீட்டுத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

பா. சுதர்சன்
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி: 20 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60: N 86


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org